பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
15 07 2025 6 45
செவ்வாய்க்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

- சர்வதேச விண்வெளி நிலையத்திலிருந்து இந்தியாவின் சுபான்சு சுக்லா உட்பட 4 பேர் டிராகன் விண்கலம் மூலம் இன்று பிற்பகல் 3 மணியளவில் பூமிக்கு திரும்ப உள்ளனர்.
- குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு ஒடிசாவில் **Ravenshaw** பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவில் இன்று பங்கேற்கிறார்.
- திருவாரூர் அருகே பள்ளி குடிநீர்த் தொட்டியில் மனிதக் கழிவு கலந்த சம்பவத்தில் தொடர்புடைய குற்றவாளிகளை உடனடியாக காவல்துறையினர் கைது செய்ய வேண்டும் என்று மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் வலியுறுத்தியுள்ளார்.
- பள்ளி வளாகங்களை தவறாகப் பயன்படுத்துவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று மாநில அமைச்சர் திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி தெரிவித்துள்ளார்.
- உலகக் கோப்பை மகளிர் செஸ் போட்டியில் இந்தியாவின் வைஷாலி, ஹரிகா துரோனவள்ளி காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

<u>*--- இனி விரிவான செய்திகள் ---*</u>

<<<<>>>>

சர்வதேச விண்வெளி நிலையத்திலிருந்து இந்தியாவின் சுபான்சு சுக்லா உட்பட 4 பேர் டிராகன் விண்கலம் மூலம் இன்று பிற்பகல் 3 மணியளவில் பூமிக்கு திரும்ப உள்ளனர்.

18 நாட்களுக்குப் பின்னர், இந்திய நேரப்படி நேற்று மாலை 4.35 மணியளவில் சர்வதேச விண்வெளி நிலையத்திலிருந்து டிராகன் விண்கலம் பிரிந்து அவர்கள் பயணத்தை தொடங்கியுள்ளனர்.

அமெரிக்காவின் கலிபோர்னியா கடற்பகுதியை சுபான்சு சுக்லா உள்ளிட்டோர் வந்தடைவார்கள் என்று மொஹாலி, இந்திய அறிவியல் கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவன பேராசிரியர் திரு. தா.வீ. வெங்கடேஸ்வரன் எமது செய்தியாளருக்கு அளித்த சிறப்புப் பேட்டியில் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு ஒடிசாவில் **Ravenshaw** பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவில் இன்று பங்கேற்கிறார்.

**Ravenshaw** மகளிர் உயர்நிலைப் பள்ளியில் மேம்பாட்டு பணிகளுக்கு அவர் அடிக்கல் நாட்ட உள்ளார்.

ஒடிசா மாநிலத்தின் புகழ்பெற்ற கவிஞரான **Adikabi Sarala Das**-ன் பிறந்தநாள் கொண்டாட்டங்களிலும் குடியரசுத்தலைவர் பங்கேற்க உள்ளார்.

<<<<>>>>

திருவாரூர் அருகே பள்ளி குடிநீர்த் தொட்டியில் மனிதக் கழிவு கலந்த சம்பவத்தில் தொடர்புடைய குற்றவாளிகளை உடனடியாக காவல்துறையினர் கைது செய்ய வேண்டும் என்று மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், உலகில் வேறு எங்கும் நடைபெறாத கொடூரம் இந்த ஆட்சியில் நடைபெற்றிருப்பதாகவும், இது அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளதாகவும், குறிப்பிட்டுள்ளார்.

வேங்கைவயல் கடந்த 2022ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் மேல்நிலைக் குடிநீர்த் தொட்டியில் மனிதக் கழிவு கலந்த சம்பவத்தில் இதுவரை உண்மைக் குற்றவாளிகள் கைது செய்யப்படவில்லை என்றும் அவர் குறை கூறியுள்ளார்.

இதுபோன்ற சம்பவங்கள் மீண்டும் மீண்டும் அரங்கேறி வருவதற்கு தமது கண்டனத்தையும் அவர் தெரிவித்துள்ளார்.

மாநில அரசு வழக்கம்போல இந்தப் பிரச்சினையை திசை திருப்பாமல் காவல்துறையினரும், அதற்குப் பொறுப்பு வகிக்கும் முதலமைச்சரும் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் டாக்டர் எல். முருகன் கேட்டுக்கொண்டுள்ளார்.

<<<<>>>>

பள்ளி வளாகங்களை தவறாகப் பயன்படுத்துவோர் யாராக இருந்தாலும் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்று மாநில அமைச்சர் திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி தெரிவித்துள்ளார்.

திருச்சியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், திருவாரூரில் உள்ள அரசுப் பள்ளி குடிநீர்த் தொட்டியில் மனிதக் கழிவு கலந்தது தொடர்பாக விசாரணை நடைபெற்று வருவதாக கூறினார்.

விசாரணைக்குப் பின்னர் காவல்துறை மூலம் சம்பந்தப்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்று திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி குறிப்பிட்டார்.

<<<<>>>>

திண்டிவனம் அருகே மயிலம் பகுதியில் ரயில்வே பராமரிப்பு பணிகள் காரணமாக காலை மணி 9.45க்கு தாம்பரத்தில் இருந்து விழுப்புரம் வரை இயக்கப்படும் மின்சார ரயில் இன்றும், நாளையும் திண்டிவனம் வரை மட்டுமே இயக்கப்படும் என்று தெற்கு ரயில்வே அறிவித்துள்ளது.

இதேபோல் பிற்பகல் மணி 1.40க்கு விழுப்புரத்தில் இருந்து புறப்படும் மின்சார ரயில், இந்த இரண்டு நாட்களிலும் திண்டிவனத்தில் இருந்து இயக்கப்படும் என்று தெற்கு ரயில்வே செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

<<<<>>>>

அடுத்த ஆண்டு சட்டப்பேரவைத் தேர்தலில் அஇஅதிமுக கூட்டணி நிச்சயம் வெற்றி பெறும் என்று அக்கட்சியின் பொதுச்செயலாளரும், எதிர்க்கட்சித்தலைவருமான திரு. எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.

கடலூர் மாவட்டம் விருத்தாச்சலம் அருகே பாலக்கரையில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் உரையாற்றிய அவர், கடந்த 4 ஆண்டுகால திமுக ஆட்சியில் ஊழல் அதிகரித்துவிட்டதாக குறை கூறினார்.

முந்தைய அஇஅதிமுக ஆட்சியில் கொண்டுவரப்பட்ட பல்வேறு திட்டங்களையும் திரு. எடப்பாடி பழனிசாமி பட்டியலிட்டார்.

<<<<>>>>

நிஃபா வைரஸ் குறித்து மக்கள் பீதியடையத் தேவையில்லை என்று நீலகிரி மாவட்ட ஆட்சியர் திருமதி லக்ஷ்மி பவ்யா தன்னீரு தெரிவித்துள்ளார்.

உதகையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், மாவட்ட எல்லையில் தீவிர கண்காணிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக கூறினார்.

<<<<>>>>

*இருவரிச் செய்திகள்*

சிரியாவின் **Sweida** மாகாணத்தில் பழங்குடியின மக்களுக்கும், தீவிரவாத குழுக்களுக்கும் இடையே ஏற்பட்ட மோதலில் கடந்த 2 நாட்களில் 89 பேர் உயிரிழந்துள்ளனர். 200க்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர்.

<<<<>>>>

அமெரிக்காவுடன் அணுசக்தி விவகாரம் குறித்த பேச்சுவார்த்தைக்கு தேதி எதுவும் நிர்ணயிக்கப்படவில்லை என்று ஈரான் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

கனடாவின் டொரண்டோ நகரில் நடத்தப்பட்ட ரத யாத்திரைக்கு இடையூறு ஏற்படுத்தியவர்கள் மீது நடவடிக்கை எடுக்க அந்நாட்டு அரசை வலியுறுத்தி இருப்பதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

<<<<>>>>

நதிநீர்ப் பங்கீடு பிரச்சினை குறித்து விவாதிப்பதற்காக தெலங்கானா, ஆந்திரப்பிரதேச முதலமைச்சர்கள் கூட்டத்தை தில்லியில் மத்திய அரசு இன்று கூட்டியுள்ளது.

<<<<>>>>

திருச்சி ஸ்ரீரங்கம் அருள்மிகு ரங்கநாதர் கோவிலில் இருந்து திருப்பதி ஏழுமலையான் கோவிலுக்கு வஸ்திர மரியாதை செய்யப்படுவதை முன்னிட்டு, கோவில் அர்ச்சகர்கள் அதனை கொண்டு சென்றனர்.

<<<<>>>>

தூத்துக்குடி மாவட்டத்தில் அரசு மாதிரி பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு செயற்கை நுண்ணறிவு பாடத்திட்டம் கொண்டுவர திட்டமிடப்பட்டுள்ளதாக மாவட்ட ஆட்சியர் திரு. இளம் பகவத் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

கன்னியாகுமரி மாவட்டம் வடசேரி பகுதியில் பள்ளி கல்லூரி மாணவர்களுக்கு போதைப்பொருட்கள் விற்க முயன்ற கோட்டார் பகுதியைச் சேர்ந்த 2 பேரை காவல்துறையினர் கைது செய்தனர்.

<<<<>>>>

கள்ளக்குறிச்சி மாவட்டம் உளுந்தூர்பேட்டையில் தூய்மைப் பணி குறித்த விழிப்புணர்வு கலைநிகழ்ச்சி நடைபெற்றது.

<<<<>>>>

முன்னாள் முதலமைச்சர் காமராஜர் பிறந்தநாளை முன்னிட்டு பூரண மதுவிலக்கை அமல்படுத்தவும், அனைவருக்கும் தரமான இலவச மருத்துவம் கிடைத்திடவும் வலியுறுத்தி லட்ச தீபாராதனை நிகழ்ச்சி விருதுநகரில் நடைபெற்றது.

<<<<>>>>

திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் பொதுமக்களிடம் இருந்து கோரிக்கை மனுக்களை மாவட்ட ஆட்சியர் திரு. பிரதாப் பெற்றுக்கொண்டார்.

<<<<>>>>

ராணிப்பேட்டை மாவட்டம் நெமிலி அருகே கீழ்வீதி கிராமத்தில் அரசின் நேரடி நெல்கொள்முதல் நிலையம் திறக்கக்கோரி விவசாயிகள் நெல் மணிகளை சாலையில் கொட்டி மறியலில் ஈடுபட்டதால் போக்குவரத்து சிறிது நேரம் பாதிக்கப்பட்டது.

<<<<>>>>

நியாயவிலைக் கடைகளில் மின்னணு எடை தராசுடன் விற்பனை முனைய கருவி இணைக்கப்பட்டுள்ளதால், மக்களுக்கு அத்தியாவசியப் பொருட்கள் வினியோகிப்பதில் காலதாமதம் ஏற்படுவதாக நாளிதழ் ஒன்றில் வெளியான செய்தியை மாநில கூட்டுறவுத்துறை மறுத்துள்ளது.

<<<<>>>>

கிருஷ்ணகிரி மாவட்டம் ஒசூரில் சாலையோரம் நின்றுகொண்டிருந்த லாரி மீது இருசக்கர வாகனம் மோதிய விபத்தில் பள்ளி மாணவர்கள் 3 பேர் உயிரிழந்தனர்.

<<<<>>>>

சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் உள்ள மழைநீர் வடிகால்களில் வண்டல் மற்றும் கழிவுகளை முதல்முறையாக நவீன இயந்திரம் மூலம் அகற்றி தூர்வாரும் பணியை மாநகராட்சி மேயர் திருமதி பிரியா தொடங்கி வைத்தார்.

<<<<>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

உலகக் கோப்பை மகளிர் செஸ் போட்டியில் இந்தியாவின் வைஷாலி, ஹரிகா துரோனவள்ளி காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

ஜார்ஜியாவில் நடைபெற்று வரும் இப்போட்டியின் 3வது சுற்று ஆட்டங்களில் ஹரிகா, கிரீஸ் நாட்டின் **Stavroula**-வையும், வைஷாலி அமெரிக்காவின் **Carissa Yip**-யும் வென்றனர்.

<<<<>>>>

இந்தியா – உஸ்பெகிஸ்தான் அணிகளுக்கு இடையேயான 20 வயதுக்கு உட்பட்டோருக்கான நட்புணர்வு மகளிர் கால்பந்து போட்டி டிரா ஆனது.

<<<<>>>>

ஜப்பான் ஓபன் பேட்மிண்டன் போட்டி இன்று தொடங்கியது.

<<<<>>>>